1984 மார்ச் 9]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருக்கிற தமிழர்களுடைய கலை, கலாச்சார தொடர்புடைய சங்கமாகக் கருதப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அதற்கென குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அக்குழுவின் பரிந்துரையை வைத்து மேற்கொண்டு இதற்கென விரிவான ஒரு செயல்முறையை வைத்து இந்த சங்கத்தைத் துவக்க இருக்கிறோம். தமிழ் அறிஞர் திரு. விசுவநாதன் அவர்கள் அதில் உறுப்பினராக இருக்கிறார்கள். தமிழ் அறிஞர் திரு. தேவநேயப்பாவாணர் அவர்களும் அதில் உறுப்பினராக இருந்தார்கள். அவர்கள் மறைந்துவிட்டார்கள். தமிழ் அறிஞர் திரு. வேணுகோபால் பிள்ளை அவர்களும் உறுப்பினராக இருக்கிறார்கள். ஆனால் இவருடைய உடல்நிலையும் சரியில்லாத காரணத்தால் இருவருக்கும் பதிலாக வேறு இரண்டு பேரைப் போடுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

ஆசிரியர்-மாணவர் விகிதம்.

*78 வினா.—திரு. ஆ. நல்லசிவன் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளி, மேல் நிலைப் பள்ளிகளில் ஆறாம் வகுப்புகளில் 80 மாணவர்களுக்கு மேல், ஒரு ஆசிரியருக்கு வருகை உள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், கல்வித் தரம் உயர்வாக்கப்பட, ஆசிரியர்-மாணவர் விகிதப்படி, கூடுதலாக ஆசிரியர்கள் நியமனம் செய்யும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம். 26 அரசினர் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் அங்ஙனம் உள்ளது.

(இ) மற்றும் (உ) ஆம். இந்நிலை போக்கி ஆசிரியர்-மாணவர் விகிதாசார அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்ய நிதி நிலையை அனுசரித்து ஒவ்வொரு வருடமும் 1,000 புதிய இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் மாநில முழுவதிலுமுள்ள பள்ளிகளுக்கு உருவாக்கப் படுகின்றன. இப்பணியிடங்களிலிருந்து தர்மபுரி மாவட்டத்திற்கு ஒவ்வொரு வருடமும் புதிய ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

[1984 மார்ச் 9

திரு. ஆ. நல்லசிவன் : உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் தற்போது ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் எந்த அடிப்படையில் இருக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்தி வருகிறது? எந்த அடிப்படையில் ஆசிரியர்களுடைய நியமனம் நடந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொதுவாக 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர், ஓர் பிரிவு என்கிற முறை இருக்கிறது. பொதுவாக அப்படி இருந்தாலும் 35 மாணவர்கள் இருக்கின்ற பிரிவிலே அதற்கு மேலே கூடுதலாக மாணவர்களைச் சேர்க்கின்ற நிலை வருகின்றபோது, மாவட்டக் கல்வி அதிகாரியினுடைய அனுமதியைப் பெற்று சேர்த்துக்கொள்ளலாம். அதற்குக் காரணம் வகுப்பில் சேருவதற்காக வருகின்ற மாணவர்களைச் சேர்ப்பதில்லை என்று முடிவெடுப்பதில்லை. யாரை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம். அப்படி மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, அதற்கேற்ப போதுமான அளவில் ஆசிரியர்களை நியமனம் செய்யாததால், 35 மாணவர்களுக்கு மேல் இருக்கிற நிலைமை பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு இடங்களில் இருக்கிறது. ஆனால் வருடந்தோறும் புதிதாக இடைநிலை ஆசிரியர்களை குறிப்பாக கீழ்நிலை வகுப்புகளில் போடுவதன் வாயிலாக அவர்களுடைய எண்ணிக்கையும் அதிகமாகிக்கொண்டு வருகிறது. 6-வது, 7-வது, 8-வது வகுப்புகளில் அதிக மாணவர்கள் இருப்பதால், அங்கே அதிக வகுப்புகள் இருக்கின்றன. ஆயிரம் புதிய இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பணியிடங்களை உருவாக்கும்போது, இதை மனதில் வைத்துக்கொண்டு நாம் செயல்படுகிறோம்.

செல்வி ஆ. லீலாவதி : தலைவர் அவர்களே, ஆங்கில மீடியம் பள்ளிகளில் எல்லா வகுப்புகளிலும் சாதாரணமாக 80 மாணவர்கள் வீதம் சேர்க்கப் படுகிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு இருக்கும்போது, இதைக் குறைக்க வேண்டுமென்று அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஆங்கில மீடியம் வகுப்புகளைப் பொறுத்தவரையில், நாம் புதிதாக இனிமேல் அனுமதி தருவதில்லை என்ற முடிவை எடுத்திருக்கிறோம். அந்தக் காரணத்தால், அந்தப் பள்ளிகளை நடத்துகிறவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு விகிதாச்சாரத்தை வைத்துக்கொள்வதுதான் நல்லது.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, ஒரு ஆண்டில் அரசு எதிர்பார்த்ததைவிட ஒரு குறிப்பிட்ட வகுப்பில் அதிகமான மாணவர்கள் இருந்தால், அந்த ஆண்டிலேயே 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க அனுமதி அளிக்கப்படுமா?

1984 மார்ச் 9]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சென்ற ஆண்டு அல்லது முந்தைய ஆண்டு பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நடைமுறைப் படுத்துவதில் கடினம் இல்லை. இந்த முறை 30 வருடங்களாகத் தொடர்ந்து நடந்து வருகிற பிரச்சினையாகும். அதிகமான மாணவர்களைச் சேர்ப்பது, ஆனால் குறைந்த ஆசிரியர்களை வைத்துக் கொண்டு நடத்தச் சொல்வது என்பது பல ஆண்டுகளாக இருக்கிறது. உடனடியாக நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் 20 ஆயிரம், 30 ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்க வேண்டி வரும். இருக்கிற நிதி வசதிகளுக்கேற்ப எவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் எடுக்க முடியும்.

செல்வி ஆ. லீலாவதி : தலைவர் அவர்களே, ஆங்கில மீடியம் வகுப்பில் எவ்வளவு பேர்களை வேண்டுமானாலும் சேர்க்க முடியுமா? சில சமயங்களில் 100 மாணவர்களைக்கூட சேர்க்கிறார்கள். இதனால் ஆசிரியர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. இந்த சிரமத்தைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் சேர்க்கக்கூடாது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அதற்கு மேல் 10, 20 மாணவர்கள்கூட சேர்க்க வேண்டுமென்றால் அங்கேயுள்ள கல்வி அலுவலர்களுடைய அனுமதி பெற்று சேர்க்க வேண்டும். அதற்கு மேலும் அவ்வாறு அனுமதி பெறாமல் மாணவர்களைச் சேர்த்திருந்தால். அது கண்டிக்கப்படவேண்டியது. மேற்கொண்டு புதிய பள்ளிகளை ஆரம்பிக்க சாத்தியக்கூறு இல்லாத காரணத்தால், அவர்களே இந்தத் தவறைச் செய்யாமல் இருப்பது நல்லது.

திரு. க. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இந்தத் தவறுகள் 30 ஆண்டுகளாக நடந்து வருகின்றன என்று சொன்னார்கள். அதற்காக 20 ஆயிரம் ஆசிரியர்களைப் போடவேண்டி வரும் என்றும் சொன்னார்கள். முந்தைய காலத்தில் நம்முடைய நாட்டில் ஓராசிரியர் பள்ளிகள் இருந்தபோது, மானிடோரியல் சிஸ்டம் என்று வைத்து, பல மாணவர்களை ஒரு ஆசிரியர் மானீட்டர்கள் உதவியுடன் பயிற்றினார். அதை ஒரு முறையாகக் கையாண்டு அதன்மூலம் எல்லோருக்கும் கல்வி கிடைக்கிறமாதிரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதுமாதிரி, ஒரு புதிய முறையைக் கொண்டு வர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை இப்போது இல்லை.